RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 169 | ஜூன்.26 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "இந்திய ஜனநாயகம் கொடூரமாக நசுக்கப்பட்டதை இந்த நாள் நினைவூட்டுகிறது" : பிரதமர் மோடி

புதுடெல்லி: ஜூன்.26-

"நாட்டில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட இந்த நாள், இந்திய ஜனநாயகம் கொடூரமாக நசுக்கப்பட்ட அந்த இருண்ட காலத்தை நினைவூட்டுகிறது," என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

1975ம் ஆண்டு ஜூன் 25ம் தேதி அன்றைய பிரதமர் இந்திரா காந்தி நாட்டில் அவசரநிலையை பிறப்பித்தார். அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட ஜூன் 25ம் தேதி அரசியலமைப்பு படுகொலை நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "அரசியலமைப்பு படுகொலை தினம் என்பது இந்திய ஜனநாயகம் கொடூரமாக நசுக்கப்பட்ட அந்த இருண்ட காலத்தை நமக்கு நினைவூட்டுகிறது. ஜனநாயகம், அரசியலமைப்புச் சட்டம், குடிமக்களின் உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் எப்போதும் உறுதியுடன் இருக்க இது நம்மைத் தூண்டுகிறது. அவசரநிலையை எதிர்த்த அனைத்து சான்றோர்களுக்கும் எனது மரியாதைக்குரிய வணக்கங்கள்.

சுதந்திரத்தின் மூலமே மகிழ்ச்சி கிடைக்கிறது; சுதந்திரத்தின் மூலமே உன்னத நிலையை அடைவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது; சுதந்திரத்தின் மூலமே நிறைவு கிடைக்கிறது; சுதந்திரத்தின் மூலமே மிக உயர்ந்த நிலையை எட்ட முடியும்" என தெரிவித்துள்ளார்.



அரசியலமைப்பு படுகொலை தினத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "1975, ஜூன் 25 என்பது இந்திய ஜனநாயக வரலாற்றில் ஒரு இருண்ட அத்தியாயம். அப்போது இந்திரா காந்தியும் காங்கிரஸ் கட்சியும் அதிகாரத் திமிருடன் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆன்மா, பத்திரிகை சுதந்திரம், கருத்துரிமை ஆகியவற்றை நசுக்க முயன்றன. அரசியலமைப்பு படுகொலை தினமான இன்று, நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்க அவசரநிலைக்கு எதிராகப் போராடிய ஜனநாயகப் போராளிகள் அனைவருக்கும் எனது மரியாதைக்குரிய வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

ஜூன் 25ம் தேதியை அரசியலமைப்பு சட்ட படுகொலை தினம் என மோடி அரசு அனுசரிப்பதன் நோக்கம், இந்த இருண்ட அத்தியாயத்தை நாட்டின் நினைவில் நிலைநிறுத்துவதும், எதிர்காலத்தில் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் மீது காங்கிரஸ் கட்சி மீண்டும் ஒருபோதும் இத்தகைய தாக்குதலை நடத்த முடியாது என்பதை உறுதி செய்வதுமே ஆகும்" என தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "1975 ம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி, இந்திய ஜனநாயக வரலாற்றில் நாடு அவசரநிலையைச் சந்தித்த ஒரு இருண்ட நாளாகும். அதிகார மமதையில், குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன, பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்பட்டது, ஆயிரக்கணக்கான அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் காரணமின்றி சிறையில் அடைக்கப்பட்டனர். மாற்றுக்கருத்துகள் ஒடுக்கப்பட்டன. அந்த காலகட்டத்தில், அரசியலமைப்பின் விழுமியங்களையும் ஜனநாயக மரபுகளையும் பலவீனப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஜனநாயகம் மீதான அந்தத் தாக்குதலை வருங்கால சந்ததியினர் ஒருபோதும் மறக்கக்கூடாது என்பதற்காக, இந்நாளை 'அரசியலமைப்பு படுகொலை நாளாக' அனுசரிக்க முடிவு செய்ததன் மூலம், பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அந்த இருண்ட அத்தியாயத்தை நினைவூட்டியுள்ளார். ஜனநாயகம், குடிமை உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு விழுமியங்கள் மீதான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த நாள் அமைகிறது. அரசியலமைப்பு என்பது நமது நாட்டின் மிகப்புனிதமான நூல், நமது ஜனநாயகக் குடியரசின் வலுவான அடித்தளம் என்பதையும், அதைப் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பு என்பதையும் இது நமக்கு நினைவூட்டுகிறது" என தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் ஆனந்துடன் திடீர் சந்திப்பு த.வெ.க.,வில் இணைகிறார் சி.விஜயபாஸ்கர்?

சென்னை, ஜூன்.26-

அதிமுகவிலிருந்து விலகிய சி. விஜயபாஸ்கர், அமைச்சர் என். ஆனந்தை திடீரென நேரில் சந்தித்து பேசிய நிலையில், வரும் திங்கட்கிழமை அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



2026 சட்டமன்ற தேர்தலில் 108 தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் ஐ.யூ.எம்.எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருக்கிறது. ஆளும் கட்சியாக இருந்த திமுக இந்த தேர்தலில் 2ஆம் இடம் பெற்று எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறது. ஆனால் கடந்த முறை எதிர்க்கட்சியாக இருந்த அதிமுக 47 இடங்களை மட்டுமே கைப்பற்றி 3ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது.

தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது அக்கட்சியினர் கடும் அதிருப்தியில் உள்ளனர். இதனால், கட்சிக்குள்ளேயே அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி முதலமை

ச்சர் விஜய்க்கு, ஆளுநர் அறிவுறுத்தி இருந்த போது, சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி தலைமையிலான 25 பேர் கொண்ட அணி, வெளிப்படையாகவே தங்கள் ஆதரவை விஜய்க்கு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமாரவேல், பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் சத்யபாமா, அம்பா சமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா ஆகிய 4 பேர் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டு தவெகவில் இணைந்தனர்.

இதனால், கட்சித் தாவல் தடை சட்டத்தை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கையில் எடுத்த நிலையில், அதிருப்தி அணியில் இருந்த எஸ்.பி. வேலுமணி தலைமையிலான சட்ட மன்ற உறுப்பினர்கள் சமாதானத்திற்கு வந்தனர். ஆனால், சி.வி.சண்முகம், சி. விஜய பாஸ்கர் ஆகிய இருவர் மட்டும் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதை தவிர்த்து வந்தனர்.

கடந்த 16 ஆம் தேதி சி. விஜயபாஸ்கர் தனது விராலிமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார். இதனால் சட்டமன்றத்தில் 47ஆக இருந்த அதிமுகவின் பலம் 42 ஆக குறைந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்த விஜயபாஸ்கர், தவெகவில் இணைய உள்ளார் என தகவல் பரவி வந்த நிலையில் அவர் தொடர்ந்து அமைதி காத்து வந்தார்.

இந்நிலையில் விஜய பாஸ்கர், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள தவெக பொதுச் செயலாளரும், அமைச்சருமான என். ஆனந்த் இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து பேசியுள்ளார். இதனைத் தொடர்ந்து வரும் திங்கட்கிழமை அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக முதலமைச்சர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ பதவியை ராஜிநாமா செய்த நிலையில் தமிழகத்தில் தற்போது 6 சட்டமன்ற தொகுதிகள் காலியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், செக்கானூரணியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசினர் கள்ளர் மாணவியர் இல்லத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி.சம்பத்குமார் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை வசதிகள், தங்குமிட வசதிகள், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் குறித்து கேட்டறிந்தார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை , உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய் ஆகியோர் உடன் உள்ளனர்

## சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் பிறந்த நாளையொட்டி திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர்கள் மரியாதை செலுத்தினார்கள்

சென்னை, ஜூன்.26-

தமிழ்நாடு அரசின் சார்பில், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் 96 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அமைச்சர் பெருமக்கள் நேற்று (25.6.2026) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



தமிழ்நாடு அரசியல்

விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள் 1931ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் நாள் அலகாபாத் நகரில் ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை டேராடூன் கர்னல் பிரவுன் பள்ளியிலும், பின்பு புனே பெர்குஷன் கல்லூரியில் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். மேலும், 1950 ஆம் ஆண்டு அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று பட்டமும் பெற்றார்.

வி.பி.சிங் அவர்கள் சட்டக் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து, சர்வோதய சமாஜத்தில் இணைந்து, பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்து, தனது நிலங்களை தானமாக வழங்கினார்.

1969 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச சட்டமன்ற உறுப்பினர், 1971 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர், 1974ஆம் ஆண்டு இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் மந்திரி சபையில் வர்த்தகத் துறை துணை அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்தார்.

1980ம் ஆண்டு உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்தார். வி.பி.சிங் அவர்கள் 1984ஆம் ஆண்டு இந்திய அரசின் நிதியமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய பதவிகளை வகித்தார். இதனைத் தொடர்ந்து, 1989ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டினார். அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக பி.பி. மண்டல் அவர்கள் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால் சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சமூகத்திற்கு அரசுப் பணியிடங்களில் 27 சதவீதம் இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை செயல்படுத்திய சமூக நீதிக் காவலர், வி.பி. சிங் அவர்கள் ஆவார்.

## "என்னை எங்கேயும் தேட வேண்டாம்!"; விஜய்யின் குட்டி கதைக்கு மு.க.ஸ்டாலின் பதில்

திருவாரூர், ஜூன்.26-

தமிழக சட்டப் பேரவையில் விஜய் சொன்ன 'அப்பாவைக் காணோம்' குட்டிக் கதை கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், "என்னை எங்கேயும் தேட வேண்டாம்; நான் மக்கள் மனதில் இருக்கிறேன்," என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்தார்.



திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் மதிவாணன் இல்ல திருமண விழாவை நடத்தி வைத்தார் திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின்.

பின்னர் விழாவில் ஸ்டாலின் பேசுகையில், "நாட்டில் மின்வெட்டுப் பிரச்சினை, டெல்டா மாவட்டத்தில் குறித்த நேரத்தில் விவசாயிகளுக்கு மேட்டூர் அணை தண்ணீர் திறக்க முடியவில்லை போன்ற பிரச்சினைகள் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திமுக ஆட்சியில் குறித்த நேரத்தில் மேட்டூர் அணையை திறந்து வைத்துள்ளோம். இவற்றை யெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி சட்டப் பேரவையில் எடுத்துச் சொல்லிப் பேசினார்.

ஆனால் முதல்வராக உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல், "எங்கே உங்கள் அப்பாவை காணோம்!" என்கிறார். அப்பாவை அங்கே தேடாதீர்கள். அவர் மக்கள் மனதில் பதிந்திருக்கிறார். சட்டப்பேரவையில் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் மன்றத்திலே நான் இருக்கிறேன் என்பதை உங்களிடத்தில் கூறிக் கொள்கிறேன்.

கடந்த 60 வருடங்களாக மக்களோடு மக்களாகத் தான் பணியாற்றி வருகிறேன். ஒவ்வொரு மாவட்டத் துக்கும் முதல்வராக இருந்தபோது, சென்றிருக்கிறேன். நான் ஆய்வுக் கூட்டம் நடத்தியதைப் போல யாரும் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி இருக்க மாட்டார்கள். கோட்டையில்தான் கோப்புகள் உள்ளன அந்த கோப்புகளை எடுத்துப் பாருங்கள்.

மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்களில் எல்லாம் நான் கையெழுத்துள்ளேன் அங்கெல்லாம் நான் இருக்கிறேன். என்னை தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மக்களோடு தான் இருக்கிறேன். அண்ணா தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தது ஒன்றே போதும், இந்த தமிழ்நாடு உள்ளவரை நான் தான் முதல்வர் என்று சொன்னதைப் போல, மகளிர் உரிமை திட்டம் இருக்கும் வரை இந்த ஸ்டாலின்தான் முதல்வர், கருணாநிதி கூட்டணி அமைத்தால் கூட்டணி கட்சியை பாதுகாப்பாக வைத்திருப்பார், அவர்களாகத் தான் கூட்டணியை விட்டு போவார்களே தவிர, வெளியேற்ற மாட்டார்.

அந்த வழியில்தான் நான் கூட்டணியை பாதுகாத்தேன். ஆனால் கூட்டணியே வேண்டாம் எனவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அதனையும் பரிசீலிப்போம்," என்றார்.

இந்த விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் முத்தரசன் மற்றும் திமுக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## வீட்டிற்குள் நுழைந்த சிறுத்தையை வனத்துறையினர் கூண்டு வைத்து பிடித்து காட்டில் விட்டனர்

மசினகுடி, ஜூன்.26-

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், மசனகுடி வன சரகம் அவரல்லா பிரிவு காப்புக்காடு ஆளுமைக்கு உட்பட்ட கூடலூர் செல்வப்பா காலனி குடியிருப்பு பகுதியில் உள்ள சிவக்குமார்

என்பவரது வீட்டிற்குள் நாயை விரட்டி வந்த சிறுத்தை ஒன்று 24/06/26 ம் தேதி அன்று இரவு 9.30 மணிக்கு நுழைந்துவிட்டது.




வீட்டின் உரிமையாளர் உடனடியாக கதவை வெளிப்புறமாக தாழ் போட்டு விட்டார். தகவல் கிடைத்ததை அடுத்து அங்கு விரைந்து சென்ற மசனகுடி வனத்துறையினர் உடனடியாக முதுமலை புலிகள் காப்பகம் கள இயக்குனர் உத்திரவின்படி முதுமலை புலிகள் காப்பகம் துணை இயக்குனர் ஆணைக்கிணங்க இன்று 25/6/26 ம் தேதி அன்று அதிகாலை சுமார் 2.30 மணி அளவில் அந்த சிறுத்தையை கூண்டு வைத்து பிடித்து துணை இயக்குனர் ஆணையின்படி சீகூர் காப்பு காட்டில் விடப்பட்டது.

## விபத்து ஏற்படும் முன் சரி செய்யபடுமா சாலை பகுதி!

நீலகிரி. ஜூன்.26-

நீலகிரி மாவட்டம் குன்னூர், உதகை சாலையில், பாய்ஸ்கம்பெனி, பகுதியில் இருந்து உபதலை செல்லும் சாலை பகுதி சரி செய்யபடாமல் சிதறி கிடக்கும் ஜல்லித்துகள்கள் தற்போது மழை காலமாக உள்ள நிலையில், இந்த சாலையில் நடந்து செல்லும் பொது மக்கள் பாதிக்கப்படும் நிலை.நன்றாக இருந்த சாலை சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு சாலை பணி மேற்கொள்கின்றோம் என்று சாலை பணி மேற்கொண்ட நிலையில், தமிழக சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பபட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், சாலை பணி முடியும் தருவாயில் இந்த சாலை பகுதி மட்டும் நிறுத்தப்பட்டது.தேர்தல் முடிந்தும் தமிழகத்தில் புதிய ஆட்சி அமைந்த பின்பும், நிறுத்தப்பட்ட இந்த ஜல்லித்துகள்கள்



சாலை பணி முடியாமல், அப்படியே கிடப்பில் போட்ட நிலையில், கண்டும் காணாமால் செல்கிறது, சாலை பணியினை மேற்கொண்ட சம்மந்தப்பட்ட துறை. தற்போது தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ள நிலையிலும், இனி தொடர்ந்து மழை காலம் என்பதாலும்,ஜல்லித்துகள்கள் நிறைந்த சாலை பகுதியில் நடந்து செல்லும் பொதுமக்கள், மருத்துவ வாகனங்கள், பள்ளி வாகனங்கள், தனியார் வாகனங்கள், இயக்க முடியாமல் வாகன ஓட்டிகள் பாதிப்பு. இரு சக்கர வாகன ஓட்டிகள் இந்த சாலையில் வாகனங்களை ஓட்டும் போது ஜல்லித்துகளில் சறுக்கி கீழே விழுந்தால் கை, கால் உடையும் நிலை. அனைத்து தரப்பினரும் பாதிக்கபடாமல் இருக்க சாலை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா, அல்லது ஏதேனும் விபத்து ஏற்பட்ட பிறகு இந்த சாலையினை சரி செய்யலாம் என காத்துக்கொண்டிருக்கிறதா, இதன் சம்மந்தப்பட்ட துறை. வாகன ஓட்டிகள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் கேள்வி?ஜல்லிதுகள்கள் நிறைந்த இந்த சாலை பகுதியினை சரி செய்ய நீலகிரி மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா!

## தாம்பரம் நகராட்சி 59வது வார்டு சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம், ஜூன்.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 59வது வார்டு சார்பில் தமிழக வெற்றி கழக தலைவர் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மனித வள மேம்பாட்டு துறை அமைச்சரும் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சரத்குமார் அவர்களின் ஆலோசனைப்படி மாவட்ட மகளிர் அணி நிர்வாகி பா.பூங்கோதை ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது இதில் மாவட்டம் மகளிர் அணி தலைமை இந்துமதி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு அணி தெய்வநாயகி, யுவராஜ், தமிழ்செல்வி அமுல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கோவிலில் சிறப்பு பூஜை வழிபாடு செய்து



அதனைத் தொடர்ந்து கொட்டு மழையிலும் சுமார் 250க்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவு வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் விக்டோரியா, ரஜினிஸ்வரி, லட்சுமி, சீ.பூங்கோதை, அஸ்வினி, தகவல் தொழில் நுட்ப அணி பா.ஏழுமலை, பெருங்களத்தூர் 59வது வார்டு மகளிர் அணி நிர்வாகி குமாரி மற்றும் 59வது வார்டு கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் பசலி எண் 1435 மதுரவாயல் வட்டத்திற்கு உட்பட்ட , மதுரவாயல், நொலம்பூர், வளசரவாக்கம், நெற்குன்றம், ராமாபுரம், போரூர், சிவபூதம், செட்டியார் அகரம், துண்டலம், காரப்பாக்கம் ஆகிய கிராம பொது மக்களுக்கு உரிய குறைகளான பட்டா, ஓ ஏ பி , வாரிசு சான்று, சாதி சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை தொடர்பான மனுக்களை ஜமாபந்தியில் பெற்று நிறைவேற்றி தருவதாக வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் தீர்வாய அலுவலர் ப. கீதா பிரியா உறுதியளித்தார்.உடன் மதுரவாயல் வட்டாட்சியர் ரமேஷ், சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் மகேந்திரன், துணை வட்டாட்சியர் செல்வராணி, வட்டத் துணை ஆய்வாளர் சண்முகமணி, நில அலுவலர்கள் , கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் இருந்தனர்.

## மெட்ராஸ் ரெஜிமென்டல் சென்டர் 2026 சர்வதேசஒலிம்பிக் தின தடகளப் போட்டி

வெலிங்டன், ஜூன் .26-

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டனில் உள்ள மெட்ராஸ் ரெஜிமென்டல் சென்டர் (MRC), இளைஞர் மேம்பாடு, விளையாட்டுத் திறன் மற்றும் தேசக் கட்டமைப்பில் தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க தங்கராஜ் மைதானத்தில் சர்வதேச ஒலிம்பிக் தின தடகளப் போட்டி 2026 ஐ நடத்தியது.இந்த நிகழ்வு நீலகிரி முழுவதும் உள்ள 19 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைத்தது, இது இப்பகுதியின் துடிப்பான விளையாட்டு கலாச்சாரத்தையும், நிறைந்துள்ள தடகளத் திறமையையும் பிரதிபலித்தது. தனியார், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பல்வேறு





ஓட்டப்பந்தயம் மற்றும் தடகளப் போட்டிகளில் போட்டியிட்டு, தங்களின் மன உறுதி, திறன் மற்றும் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தினர்.

கூடுதல் பங்கேற்பை ஊக்குவிக்கவும், வளர்ந்து வரும் திறமைகளை வளர்க்கவும், MRC ஜூன் 20 முதல் 22 வரை இலவச தொழில்முறை பயிற்சி வகுப்புகளை நடத்தியது. இது இளம் தடகள வீரர்களுக்கு தரமான பயிற்சி மற்றும் விளையாட்டு வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கியது. இந்த முயற்சி குறிப்பாக பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பங்கேற்பதற்கான தடைகளைக் குறைத்து ஆதரவளித்தது.கூட்டத்தில் உரையாற்றிய அதிகாரிகள், விளையாட்டு என்பது குணநலன், ஒழுக்கம், மீளெழுந்து வரும் திறன் மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றை வளர்ப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும் என்று வலியுறுத்தினர் இந்த மதிப்புகள் ஒலிம்பிக் இயக்கம் மற்றும் இந்திய ராணுவத்தின் நெறிமுறைகள் ஆகிய இரண்டிற்கும் மையமானவை ஆகும். பதக்கங்கள் சாதனையை அங்கீகரித்தாலும், விளையாட்டின் உண்மையான மதிப்பு விடாமுயற்சி, சுய முன்னேற்றம் மற்றும் நேர்மையான விளையாட்டு ஆகியவற்றின் பாடங்களில் தான் உள்ளது என்றனர்.போட்டிக்கு அப்பால், இந்த சந்திப்பு உடற்தகுதியை மேம்படுத்தவும், திறமைகளை அடையாளம் காணவும், இளைஞர்களை சிறந்து விளங்க தூண்டுவதற்கும் ஒரு தளமாக செயல்பட்டது. தன்னம்பிக்கை, குழுப்பணி மற்றும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை வளர்ப்பதன் மூலம், இந்த நிகழ்வு சமூக மேம்பாடு மற்றும் தேசக் கட்டமைப்பிற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியது. வெற்றியாளர்களுக்கு பதக்கங்கள் மற்றும் கோப்பைகள் வழங்கும் விழாவுடன் இப்போட்டி நிறைவடைந்தது. கோத்தகிரி, செயின்ட் ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்தது, அதே நேரத்தில் வெலிங்டன், ராணுவ பொதுப் பள்ளி (Army Public School) மாணவர்களுக்கான சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது.









## பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

பம்மல், ஜூன்.26-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டி ரஸ்டிட் என்ற அறக்கட்டளை சார்பில் 22.06.2026 அன்று மாற்றுத்திறனாளியின் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 50 பேருக்கு புத்தகப் பை மற்றும் மாற்றுத்திறனாளி வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு சொந்தமாக சுய தொழில் செய்வதற்கு தேவையான பொருட்களை LIONS CLUP OF CHENNAI ROSES நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டது மேலும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாவட்ட கவர்னர் லயன் டாக்டர் சந்திரசேகர், மாவட்ட கவர்னர் லயன் டாக்டர் துரைராஜ், முதல் பரிசை டிஸ்ட்ரிக்ட் லயன் ஆர்.ராஜன், இரண்டாவது வரிசை டிஸ்ட்ரிக்ட் கவர்னர் லயன் கே.ரவி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசன், தலைவர் செல்வ சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டி ரஸ்ட் இயக்குனர் செல்வி பம்மல் பி.கவிதா, கௌரவ தலைவர் அருணகிரி, செயலாளர் எஸ்.தேவி, கிளைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளி பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



## திமிரி பேருந்து நிலையம் குண்டும் குழியுமாக உள்ளதாக புகார்

ராணிப்பேட்டை, ஜூன்.26-

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் புதிதாக பேருந்து நிலையம் கட்டப்பட்டது. இப்பேருந்து நிலையத்தை பிப்ரவரி 27 2024ல் முன்னாள் முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். நிகழ்விடத்தில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன் கல்வெட்டை திறந்து வைத்து பேருந்து நிலையத்தை ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இப்படி திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையம் ஒரு வருடமே கடந்த நிலையில் பேருந்து நிலையத்தில் போடப்பட்டிருக்கும் தரை தரமற்ற நிலையில் உள்ளதால் தரை பெயர்ந்து ஆங்காங்கே குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது. இதில் முறைகேடு நடந்திருப்பதாகவும் தரமற்ற முறையில் சிமெண்ட் தரை அமைக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். கடந்த ஆட்சி காலத்தில் நடைபெற்ற இந்த முறை கேட்டில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளுக்கும் கூட்டுக் கொள்ளை நடந்திருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுவதாக கூறப்படுகிறது.



■ இராணிப்பேட்டை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக ஏ.எடிசன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## தேனி மாவட்டம் அண்ணா கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் . ம.விஜய் பாலாஜி நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, ஜூன்.26-


தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம் க.விலக்கில் அண்ணா கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் . மற்றும் கம்பம் சட்டமன்ற உறுப்பினர்.பி.எல் .ஏ.ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி , நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் நடைபெற்று வரும்



உற்பத்திப் பணிகள், பருத்தி கொள்முதல் நடைமுறைகள், நூல் உற்பத்தி அளவு, இயந்திரங்களின் செயல்திறன், மின்சாரப் பயன்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆகியன குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் , அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு தெரிவிக்கையில்,

விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தேவையான நூல்கள் உற்பத்தி ஆகியன குறித்தும், கடந்த காலங்களில் நலிவுற்ற நிலையில் இருந்த இந்த நூற்பாலையினை மீட்டு அதிக அளவில் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன், அண்ணா கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் இயங்குகிறது என்ற நிலையை உருவாக்க என்னென்ன அடிப்படை வசதிகள் தேவையோ அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி செய்துதரப்படும் என தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் தொழிலாளர்களை சந்தித்து, அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்ததுடன், தொழிலாளர்களின் பணி நிரந்தரம் குறித்து பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். இவ்வாய்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .ரஜத் பீடன் ., இணை இயக்குநர் (கைத்தறி, சென்னை) .கிரிதரன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) கவிதா, துணை இயக்குநர் (துணிநூல், மதுரை மண்டலம்) .திருவாசகர், உதவி இயக்குநர் / செயலாட்சியர் சம்பத்குமார், வட்டாட்சியர் (ஆண்டிபட்டி) ஜாஹிர் உசேன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





■ சென்னை மடிப்பாக்கம், கார்த்திகேயபுரம் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நவசக்தி காமாக்ஷி அம்பாள் திருக்கோயில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீ பராபவ வருஷம் ஆனி மாதம் 10ஆம் தேதி புதன்கிழமை தசமி திதி சித்ரா நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இக்கோயிலானது 2009 ல், முதல் முறையாக கும்பாபிஷேகம் நடைபெற்று, 18 வருடங்களுக்குப் பிறகு இது இரண்டாவது கும்பாபிஷேகம் ஆகும்.கோயிலின் சிறப்பானது நவவார கனி வாங்குவது, 5 பௌர்ணமிக்கு அம்பாளுக்கு மாலை அணிவிப்பது, மட்டை தேங்காய் வழிபாடு, நவராத்திரி போன்ற நிகழ்வுகள் நடைபெறுகிறது. ஆலய நிர்வாகி ராதா சேதுராமன் மற்றும் ஸ்ரீ நவசக்தி காமாட்சி அம்மன் கும்பாபிஷேக ஆலய விழா குழுவினர் கும்பாபிஷேகத்தை நடத்தினார் சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது.



# மதுவிலக்கு துறை அமைச்சர் விக்னேஷ் பழனியில் திடீர் ஆய்வு

திண்டுக்கல், ஜூன்.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் மதுவிலக்கு துறை அமைச்சரும், திண்டுக்கல் மாவட்ட பொறுப்பு அமைச்சருமாகிய விக்னேஷ் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா ஆகியோர் பழனி பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக வட்டாட்சியர் அலுவலகம், சண்முக நதி ,வையாபுரி குளம் போன்றவற்றில் ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய அவர் வையாபுரி குளம் தூர்வாரப்படும், அது மட்டுமின்றி சண்முக நதி விரைவில் தூர்வாரப்பட்டு சுத்தப்படுத்தப்படும். அதேபோல் சண்முக நதியை அழகு படுத்தவும் முயற்சி எடுக்கப்படும். குறிப்பாக திண்டுக்கல் மாவட்டம் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் பழனி, கொடைக்கானல் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது. எனவே விரைவில் திண்டுக்கல் மாவட்டம் அழகான மாவட்டமாக மாற்ற அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும் என தெரிவித்தார். திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அடுத்த மாவட்ட நிர்வாகிகளிடம் சென்று கட்சியில் சேருகின்றனர் என பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு மூத்த நிர்வாகிகள் என்ற அடிப்படையில் அவ்வாறு செய்திருக்கலாம். மேலும் எங்கு வேண்டுமானாலும் சேரலாம் .இது கட்சிக்குள் நடக்கும் பிரச்சனை .அது பேசி தீர்த்துக் கொல்லப்படும் எனவும் தெரிவித்தார்.



# சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, ஜூன்.26-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்ரி.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேனி மாவட்டம்உத்தமபாளையம் வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 235 கோரிக்கை மனுக்கள் - 27 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

உத்தமபாளையம், ஜூன்.26-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கு 1435 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) வருவாய் தீர்வாயஅலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் .பி,எல்.ஏ.ஜெகநாத் மிஷ்ரா முன்னிலையில் நடைபெற்றது. அதன்படி, நிறைவு நாளாக இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட கோம்பை (கிழக்கு), கோம்பை (மேற்கு), மல்லிங்காபுரம், உத்தமபாளையம் (தெற்கு), உத்தமபாளையம் (வடக்கு), கோகிலாபுரம்,



இராயப்பன்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களுக்கு நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 235 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) பெறப்படும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, தகுதி வாய்ந்த மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உத்தமபாளையம் வட்டத்தில் இன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 15 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பிலான இபட்டாக்களையும், 12 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளை வருவாய் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். தேனி மாவட்டத்தில் 16.06.2026 முதல் 24.06.2026 வரை (20.06.2026, 21.06.2026 மற்றும் 22.06.2026 ஆகிய நாட்கள் நீங்கலாக) நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில், உத்தமபாளையம் வட்டத்தில் 1191 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 57 பயனாளிகளுக்கு ரூ.57 இலட்சம் மதிப்பிலான இபட்டாக்களும், 44 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும், பெரியகுளம் வட்டத்தில் 1106 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 42 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும், 6 பயனாளிகளுக்கு முதியோர் ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளும், 8 பயனாளிகளுக்கு பல்வேறுசான்றிதழ்களும்,ஆண்டிபட்டி வட்டத்தில் 620 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 74 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும், தேனி வட்டத்தில் 491 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 32 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும், போடிநாயக்கனூர் வட்டத்தில் 884 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு 54பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும் என மொத்தம் 4292 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 57 பயனாளிகளுக்கு ரூ.57 இலட்சம் மதிப்பிலான இபட்டா க்களையும், 246 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளும் மற்றும் 14 நபர்களுக்கு இதர நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுஇந்நிகழ்வில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையது முகைதீன் இப்ராஹிம், உதவி இயக்குநர் (நில அளவை) .அப்பாஸ், அலுவலக மேலாளர் (பொது) .சுந்தர்லால், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் பசலி எண் 1435 அம்பத்தூர் வட்டத்திற்கு உட்பட்ட , ஒரகடம், மேனாபேடு, பட்டரவாக்கம், கொரட்டூர், அம்பத்தூர், அத்திப்பட்டு, மண்ணூர்பேட்டை, காக்கம்பள்ளம், முகப்பேர், பாடி ஆகிய கிராம மக்களுக்கு உரிய குறைகளான பட்டா, ஓ ஏ பி , வாரிசு சான்று, சாதி சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை தொடர்பான மனுக்களை ஜமாபந்தியில் பெற்று நிறைவேற்றி தருவதாக வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் தீர்வாய அலுவலர் மு.சதீஷ் குமார் உறுதியளித்தார். உடன் நேர்முக உதவியாளர் எல்.பி. நித்தியா, வட்டாட்சியர் எஸ்.டாலி, தலைமை நில அளவர் பெருமாள், நில அளவர்கள் சந்துரு, வருண் குமார் ஆகியோர் இருந்தனர்.



# கிருஷ்ணகிரியில் அண்ணாமலை இயக்கத்தில் உறுப்பினர் சேர்ந்தவர்களுக்குதென்னங்கன்றுகள், அன்னதானம்

கிருஷ்ணகிரி, ஜூன்.26-

கிருஷ்ணகிரியில் அண்ணாமலை புதிதாக தொடங்கி உள்ள, "வி த லீடர்ஸ்" இயக்கத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்களுக்கு தென்னங்கன்றுகளை முன்னாள் எம்பி வழங்கினார்.கிருஷ்ணகிரியில் 5 ரோடு குப்பம் சாலையில் நேற்று அண்ணாமலை புதிதாக தொடங்கப்பட்டுள்ள "வி த லீடர்ஸ்" இயக்கத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம் நடந்தது. இம்முகாமிற்கு முன்னாள் எம்பி நரசிம்மன் தலைமை வகித்தார். மன்னன் சிவா, சாந்தி, மாதவன், சந்திரசேகரன், முருகன், சாமி சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இம்முகாமில் புதிதாக உறுப்பினராக சேர்ந்த 150 பேருக்கு தென்னங்கன்றுகளை, முன்னாள் எம்பி வழங்கி பேசியதாவது: அண்ணாமலை, தமிழக அரசியலில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கப் போவதாக தெரிவித்துள்ளார். மேலும், வாரிசு அரசியல் இல்லாத, தகுதியான தலைவர்களை உருவாக்கும் ஒரு தளமாக இது செயல்படும் நோக்கத்திற்காக தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கத்தில் இளைஞர்கள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் இணைய வேண்டும் என்றனர்தொடர்ந்து, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது




■ கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனபள்ளி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாளகத்தில், மைலான் நிறுவன (Mylon Laboratories Ltd ) சமூக பொறுப்பு நிதியின் மூலம் ரூ. 24 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடம், பள்ளி கழிப்பறை மற்றும் கிளை அஞ்சலக கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் திறந்து வைத்து உரையாற்றினார். உடன் மைலான் நிறுவன பொது மேலாளர் பழனிகுமார், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சௌந்தராஜன், தாசில்தார் ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் சாவித்திரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# துறையூர் அருகே நெல் மூட்டைகள் தேக்கம் விவசாயிகள் வேதனை

திருச்சி, ஜூன்.26-

துறையூர் அருகே கண்ணனூர் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் செய்யவில்லை என விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். நெல் மூட்டைகளை கொண்டு வந்து 10 நாட்களாகியும் இதுவரை கொள்முதல் செய்யவில்லை என விவசாயிகள் புகார் அளித்துள்ளனர்

# வேளச்சேரி சாலைக்கு மேஜர் முகுந்த் வரதராஜன் பெயர் முதலமைச்சர் விஜய்க்குமுகுந்த் வரதராஜன் பெற்றோர் நன்றி அமைச்சர் சரத்குமார் நேரில் சந்திப்பு

தாம்பரம், ஜூன்.26-

பயங்கரவாதிகளின் எதிரான நடவடிக்கையின் வீர மரணம் அடைந்த மேஜர் முகுந்த் வரதராஜனின் தியாகத்தை போற்றும் வகையில் சென்னையில் தாம்பரத்தில் இருந்து வேளச்சேரி வரை உள்ள உள்ள வேளச்சேரி சாலைக்கு அவரது பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் விஜய் உத்தரவு பிறப்பித்துள்ளார் இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் இந்திய ராணுவத்தில் திறம்பட பணியாற்றி பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது வீர மரணம் அடைந்தவரும் மரணத்திற்குப் பிறகு இந்திய அரசின் அமைதி கால உயரிய விருதான அசோக சக்கரா விருது பெற்றவருமான மேஜர் முகுந்த



வரதராஜன் தியாகத்தை போற்றுகின்ற வகையில் தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை என பெயர் சூட்ட வேண்டும் என முதல்வர் விஜய் இந்திய ராணுவத்தின் தென்னிந்திய பகுதிகளுக்கான தளபதி லெப்டினெண்ட் ஜெனரல் ஸ்ரீ ஹரி நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார் இந்த கோரிக்கையை பரிசீலனை செய்த முதல்வர் விஜய் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார் அதன் அடிப்படையில் தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு இந்திய திருநாட்டிற்காக போராடி உயிரிழந்த மாபெரும் தியாகத்தை போற்றுகின்ற வகையில் தமிழில் மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை என பெயர் சூட்டி அதற்கான அரசாணை நேற்று முதலமைச்சர் விஜய் வெளியிட்டார். முதலமைச்சர் விஜய் அரசாணை வெளியிட்ட நிலையில் தாம்பரம் அருகே சந்தோசபுரத்தில் வசித்து வரும் முகுந்த் வரதராஜன் பெற்றோர்களை தமிழக மனிதவள மேம்பாடு மற்றும் முன்னாள் படை வீரர்கள் நலன் துறை அமைச்சர் தாம்பரம் சரத்குமார் நேரில் சந்தித்து தன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார். அதன் பின் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் சரத்குமார் கூறுகையில் தமிழக முதலமைச்சரை சந்தித்த இந்திய ராணுவத்தின் தென்னிந்திய பகுதிகளுக்கான தளபதி லெப்டினெண்ட் ஜெனரல் ஸ்ரீ ஹரி தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு அசோக சக்ரா விருது பெற்று நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த மேஜர் முகுந்த் வரதராஜனின் பெயரை சூட்ட வேண்டும் என கோரிக்கை மனு அளித்திருந்தார் அந்த மனுவின் அடிப்படையில் உடனடியாக தமிழக வெற்றி கழக தலைவரும் முதலமைச்சருமான விஜய் அதற்கான அரசாணை உடனடியாக உத்தரவிட்டு இனி அந்தச் சாலை மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை என மாற்றப்பட்டுள்ளதாக உத்தரவு பிறப்பித்தார். இந்த பெருமையான தருணத்தை மகிழ்விக்க நாங்கள் நேரடியாக மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தந்தை வரதராஜன் அவர்களைகுடும்பத்தினரை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தோம் என்றார்.

# மானாமதுரையில் அண்ணாமலை இயக்கத்தின் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்: மாற்றுக்கட்சியினர் மற்றும் பாஜகவினர் திரளாக இணைவு!

மானாமதுரை, ஜூன் .26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில், "We the Leaders" என்ற தலைப்பில் அண்ணாமலை இயக்கத்தின் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மானாமதுரை முன்னாள் பாஜக நகர பொதுச்செயலாளர் முத்துக்குமார் முன்னின்று நடத்திய இந்த முகாமில், பாரதிய ஜனதா கட்சி மற்றும் பல்வேறு மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் என ஏராளமானோர் மிகுந்த ஆர்வத்துடன் தங்களை இந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.**பாஜகவினர் மற்றும் மாற்றுக்கட்சியினர் விலகி அண்ணாமலை இயக்கத்தில் இணைவு:**குறிப்பாக, பாரதிய ஜனதா கட்சியைச்






சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் பலரும், தேமுதிக மாவட்ட துணைச் செயலாளரும் தங்களது கட்சிகளில் இருந்து விலகி, அதிகாரப்பூர்வமாக அண்ணாமலை இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இயக்கத்தில் இணைந்த முக்கிய நிர்வாகிகள் விபரம்: * சிவகுமார் (மாவட்ட பொருளாளர்) * கார்த்திகேயன் (மாவட்ட நிர்வாகி)

* ராஜசேகர் (மாவட்ட நிர்வாகி) * விநாயகம் (மாவட்ட அலுவலக செயலாளர்) * காட்டு ராஜா (ஒன்றிய பொதுச் செயலாளர்)

* மேனகா (மாவட்ட மகளிர் அணி பொதுச் செயலாளர்) * காளீஸ்வரன் (ஐடி விங்) * வெற்றிவேல் (மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட செயலாளர்) * ராஜாங்கம் (மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட துணை செயலாளர்) * எம். ஆர். மாயழகு (தேமுதிக மாவட்ட துணைச் செயலாளர்) * தினேஷ் (25வது வார்டு கிளை தலைவர்) * ஆர். நாகராஜன் (21 வது வார்டு கிளை தலைவர்) * பரத் (இளைஞரணி)

* வீரபத்திரன் (24 வது வார்டு கிளை தலைவர்) * ஈஸ்வரி (ஒன்றிய செயலாளர்) * ஆர். முருகானந்தம் (ஒன்றிய துணைத் தலைவர்)

**பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வம்:**அரசியல் கட்சி நிர்வாகிகளைத் தவிர, மானாமதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்களும், பொதுமக்களும் அண்ணாமலை இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, முகாமிற்கு நேரில் வந்து ஆர்வத்துடன் தங்களது பெயர்களைப் பதிவு செய்து இயக்கத்தில் இணைந்தனர்.நிகழ்ச்சியின் நிறைவாக, கோடை வெயிலைத் தணிக்கும் பொருட்டு முகாமில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் நீர்மோர் வழங்கப்பட்டது. மானாமதுரையில் நடைபெற்ற இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் உள்ளூர் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





■ சென்னை, போரூர் அடுத்த, மதனந்தபுரம் சந்தோஷ் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சந்தோஷ வலம்புரி விநாயகர் பெருமான் மற்றும் ஸ்ரீ விஷ்ணு பகவான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ துர்க்கை ஆகிய தெய்வங்களுக்கு ஆலய, புனராவர்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. ஆலய தலைவர் குமார், துணைத் தலைவர் எஸ்.பாஸ்கரன், செயலாளர் விஜயராகவன், கௌரவ தலைவர் பி.பாஸ்கர், சட்ட ஆலோசகர் முத்தையன் மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர். சிறப்பு அழைப்பாளராக மதனந்தபுரம் பழனி கலந்து கொண்டு சிறப்பித்தார். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், அ.காளாப்பூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், நேற்று (25.06.2026) பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, கோரிக்கை குறித்து கேட்டறிந்தார். உடன் திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் ஆர்.சீனிவாச சேதுபதி அவர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்..



■ மதுரை மாநகராட்சி பெரியார் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பது குறித்து ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் உதவி செயற்பொறியாளர் முத்து , சுகாதார ஆய்வாளர் முருகன் ஆகியோர் உடன் உள்ளனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.



## முத்துவடுகநாத தேவரின் 254வது நினைவேந்தல்

# காளையார்கோவிலில் தவெக மாவட்டச் செயலாளர் முத்துபாரதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதை!

காளையார்கோவில், ஜூன்.26-

ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்து வீரமரணமடைந்த சிவகங்கைச் சீமையின் மாமன்னர் முத்துவடுகநாத தேவரின் 254 வது நினைவேந்தல் நிகழ்வு சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் உள்ள அவரது மணிமண்டபத்தில் மிகச் சிறப்பாக நேற்று நடைபெற்றது. இதனையொட்டி, தமிழக வெற்றிக் கழகத்தின் சிவகங்கை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஷி.முத்துபாரதி தலைமையில், தவெக நிர்வாகிகள் திரளாகச் சென்று மாமன்னரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர்.சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு:



இந்த நினைவேந்தல் நிகழ்வில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தை ராணி நாச்சியார், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் இணைந்து கலந்து கொண்டு மாமன்னர் முத்துவடுகநாத தேவரின் தியாகத்தைப் போற்றி மரியாதை செலுத்தினர்.

வீரவரலாறு போற்றிய தவெக:ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து வீரத்துடன் போரிட்டு, களம் கண்ட சிவகங்கையின் பெருமை மிகு மாமன்னரின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பலரும் திரளாகப் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# மதுரை மாநகர புதிய காவல் ஆணையராக எஸ். ராஜேந்திரன் ஐபிஎஸ் பொறுப்பேற்பு

மதுரை, ஜூன்.26-

மதுரை மாநகர காவல் ஆணையராக எஸ். ராஜேந்திரன், ஐபிஎஸ் பொறுப்பேற்றுக் கொண்டார்.1998ஆம் ஆண்டு குரூப்1 தேர்வில் காவல்துறையில் பணியில் சேர்ந்த அவர், 2007ஆம் ஆண்டுகாவல்கண்காணிப்பாளராகவும், 2012ஆம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியாகவும் உயர்வு பெற்றார். பின்னர் சென்னை மாநகரில் பூக்கடை துணை ஆணையராக, மதுரை மற்றும் நெல்லை மாநகரங்களில் காவல்துறை உயர் பதவிகளில் பணியாற்றியுள்ளார்.2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று திருப்பூர் மாநகர காவல் ஆணையராக பணியாற்றிய அவர், தற்போது மதுரை மாநகர காவல் ஆணையராக பொறுப்பேற்றுள்ளார்.





# நாடு முழுவதும் ஜூன் 28ம் தேதி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

சென்னை, ஜூன்.26-

நாடு முழுவதும் வரும் ஜூன் 28, 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு பள்ளிகளில் மற்றும் ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது

# மானாமதுரையில் தவெக தலைவர் முதல்வர் விஜய் பிறந்தநாள் விழா: இலவச கண் மற்றும் பொது மருத்துவ முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது

மானாமதுரை, ஜூன் .26-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சிவகங்கை தெற்கு மாவட்டம், மானாமதுரை நகர கழகம் சார்பாகப் பொதுமக்களுக்கான இலவச கண் மற்றும் பொது மருத்துவ முகாம் நேற்று (ஜூன் 25, 2026) பர்மா காலனியில் மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் நலப்பணியாக ஏற்பாடு செய்யப்பட்ட இம்முகாமில், தகுதிவாய்ந்த மருத்துவக் குழுவினர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு



இலவசமாகக் கண் பரிசோதனைகளை மேற்கொண்டனர். மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆய்வு செய்தார் மேலும், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளுக்குப் பொது மருத்துவ ஆலோசனைகளும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இம்முகாமில் பர்மா காலனி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழக வெற்றிக் கழகத்தின் மானாமதுரை நகர கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161